பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 23 திங்கட்கிழமை 06.06.2022 கதிர் 213

**இனி அது ரகசியம் அல்ல!**

எதிரெதிர் அணியில் இருந்த தலைவர்களான கோட்டாபய ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஓரணியில் அரசியல் செய்யும் புரிந்துணர்வுக்கு வந்தமை அதிசயம்தான். இந்தப் புரிந்துணர்வு எத்தனை நாளைக்கு ஓடும் என்ற ☞2

# ‘21’ குறித்து தமிழ்க் கட்சிகள் தமக்குள் இன்று கலந்தாய்வு

## கூட்டமைப்புத் தனித்துப் பிற்பகலில் ஏனையவற்றுடன் சேர்ந்து மாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 06

21ஆவது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமாக ஆராய்ந்து முடிவொன்றை எட்டுவதற்காக தமிழ்க் கட்சிகள் இன்று கூடவுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவில் கூடவுள்ளது. அதேவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் இன்று மாலை 6 மணிக்கு மெய்நிகர் வழியில் கூடிப் பேசவிருக்கின்றன. ☞2

## யாழ்.பல்கலைக்குள் நுழைந்து மாணவியரைத் தாக்கிய இருவர்

### மடக்கிப் பொலிஸிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினுள் நேற்று மாலை அத்துமீறி நுழைந்து வெளியாள்கள் இருவர் அங்கிருந்த பல்கலைக்கழக மாணவிகள் மீது தாக்குதல் நடத்திய சமயம் மாணவர்களால் மடக்கி பிடிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணபல்கலைத்தில் பொன் சிவகுமாரன் நினைவு தினம் நேற்று இடம்பெற்றது. அதற்காக மாணவர்கள் அங்கு வருகை தந்திருந்தனர்.

அந்த நிகழ்வு முடிவுற்ற பின்னர் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நின்ற மாணவிகள் மீது வெளியில் இருந்து வந்த இருவர் திடீரென தாக்குதல் நடத்தினர்.

பின்னர் அங்கிருந்த ஆண் மாணவர் ☞2

## திக்கத்தில் மூவர் கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை, திக்கம் பகுதியில் சுமார் 1 கிலோ 900 கிராம் கேரள கஞ்சா பொதியுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறை பொலிஸாருடன் ☞2

## தங்காலயில் அடுத்த சூடு; ஒருவர் சாவு

தங்காலை, மட்டகெட்டிரிய பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் இருவர் சம்பவத்தில் ☞2

## யாழ் பல்கலைக்கழகத்திலும் சிவகுமாரனின் நினைவேந்தல்





தியாகி பொன் சிவகுமாரனின் 48 ஆவது நினைவுதினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று மாலை 4 மணியளவில் கைலாசபதி கலையரங்கின் முன்பாக மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தற்கொடையாளர் பொன் சிவகுமாரனின் நினைவுப் பகிர்வு ☞2

## பரந்தனில் காயங்களுடன் ஒருவர் சாவு

கிளிநொச்சி – பரந்தன் சந்திக்கு அண்மித்த பகுதியில் காயங்களுடன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

‘ஏ9’ வீதியில் பரந்தன் சந்தியை அண் ☞2

## முன்னாள் அமைச்சர்கள் பலருக்க எதிராக லஞ்ச, ஊழல் வழக்குகள்

கொழும்பு, ஜூன் 06

முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு எதிராக லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்ய உள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் ரோஹித்த அபேகுணவர்தன, எஸ்.எம்.சந்திரசேன, ரவி கருணாநாயக்க, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குகள் தொடரப்படவுள்ளன.

## இலங்கைக்கு உதவுங்கள் என சர்வதேசத்தை ஐ.நா. கோரும்

இலங்கைக்கு உதவி வழங்குமாறு ஐ.நா. முதல்தடவையாக உத்தியோகபூர்வ வேண்டுகோளை விடுக்கவுள்ளது.

இலங்கைக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அவசரமாக வழங்குமாறு ஐ.நா. வேண்டுகோள் விடுக்கும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக உணவு ஸ்தாபனம் ஐக்கியநாடுகளின் உணவு அபிவிருத்தி திட்டம் ☞2

## லாஃப்ஸ் சிலிண்டர் ரூ. 6,850/-

12.5 கிலோ கிராம் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 6,850 ரூபாயாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் அதிகரித்துள்ளது. அத்துடன், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 2,740 ☞2

## அட்மிரல் கொலம்பகேக்கு ஜப்பானியத் தூதுவர் பதவி



வெளியுறவு செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, ஜப்பானிய தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதற்காக ☞2

## டொலர், யூரோக்களுடன் இந்தியப் பிரஜை கைது

சென்னைக்கு வெளிநாட்டு நாணயங்களை கடத்த முயன்ற இந்திய பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொழில் நிமித்தமாக இலங்கைக்கு வந்திருந்த 45 வயதான வர்த்தகர் ஆவார். சந்தேக நபர் பயணிகள் முனையத்தில் உள்ள கழிவறைக்குள் பலமுறை சென்றுள்ளார்.

இதனையடுத்து விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளுடன் அவரைக் கைது செய்துள்ளனர்.

அவரை சோதனையிட்டதில் 117,000 கனேடிய டொலர்கள் மற்றும் 19,000 யூரோக்கள் அவரிடம் இருந்துள்ளன.

அவர் எடுத்துச் சென்ற வெளிநாட்டு நாணயங்கள் மேலதிக ☞2

## அரச ஊழியர்கள் வெள்ளியன்று வீட்டுத் தோட்டம் செய்யலாம்!

அரச ஊழியர்கள், வெள்ளிக்கிழமைகளில் வேலையிலிருந்து விடுபட்டு, வீட்டுத் தோட்டம் மற்றும் பிற நிலங்களில் பயிரிடுவதற்கான விருப்பத்தை வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, வெள்ளிக்கிழமை வேலையில் இருந்து விடுபட விரும்பும் பொது ஊழியர்கள், தங்கள் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது பிற நிலங்களிலோ உணவுப் பயிரிடுவதற்கு அந்த விடுமுறை நாள் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய விவசாயத் துறையிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த யோசனை தொடர்பில் விவசாய திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ள ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
சந்தேகங்களை அரசியல் நோக்கர்கள் எழுப்பாமல் இல்லை.

ஆயினும் சமாளித்து, விட்டுக்கொடுத்து, புரிந்துணர்வுடன் இயங்குவதில் இருவருமே இன்றைய நிலையில் மிக உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றனர் என்கின்றன விடயமறிந்த உள் வீட்டு வட்டாரங்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணியாள் தொகுதியின் சிரேஷ்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பவர் ரணிலின் வலது கையும், ரணிலின் முன்னைய அரசில் முக்கிய அமைச்சர் பதவிகளை வகித்தவருமான சாகல ரத்நாயக்க. அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பழைய நண்பரும் கூட.

இப்போது பிரதமரின் ஆளணியின் சிரேஷ்ட அதிகாரியாக நியமனம் பெற்ற சாகலவை அண்மையில் தனியாக அழைத்து பேசினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அப்போது பிரதமருக்குத் தமது தனிப்பட்ட செய்தி ஒன்றை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

"முன்னைய நல்லாட்சி அரசில் 'டீல்'களை உருவாக்கி முன்னெடுத்து, அந்த ஆட்சிக்குக் கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொடுத்த தரப்புக்கள் ரணில் பிரதமர் ஆனதும் மீண்டும் அவரை நெருங்கித் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டன" – என்று கூறிய ஜனாதிபதி, ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரின் பெயரையும் விசேடமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"இந்த 'டீல்' போடுபவர்கள் ரணில் பிரதமரானதும் மீண்டும் வந்துவிட்டார்கள். நான் பெயர் குறிப்பிடும் நபர் பணம் உழைக்கும் 'டீல்' பேச்சுக்களை ஏற்கனவே ஆரம்பித்து விட்டார் என்பதற்கு என்னிடம் நம்பத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன. ஆகவே ரணிலிடம் சொல்லுங்கள். இந்தப் பழைய பிரகிருதிகளைச் சேர்த்துக் கொண்டு நாங்கள் இந்த (அரசியல்) பயணத்தைச் சுமுகமாக முன் னெடுக்க முடியாது" – என்று கூறினார் ஜனாதிபதி.

தமது இரண்டு ஆண்டுகால அரசு இந்த கட்டத்துக்குப் போனமைக்கும் தமது அரசுக்குள் இருந்த இத்தகைய 'டீல்' உருவாக்கிகள்தான் காரணம் என்பதையும் நினைவூட்டினாராம் ஜனாதிபதி.

இந்த விடயத்தில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் புரிந்துணர்வு வருமானால் அவர்களின் தேனிலவு நீடிக்கும் என நம்பலாம்.

இதேசமயம், எந்த நிறுவனங்களி னதும் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள் போன்ற உயர் பதவிகளில் இருப்போரைத் தமது அனுமதியின்றி மாற்ற வேண்டாம் என்ற ஓர் உத்தரவை பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி நேற்று அனுப்பியிருக்கிறார் என்று தெரிய வந்தது.

இதற்கிடையில் –

நேற்று, தமது சகாக்களான சில எம்.பிக்களையும் அழைத்துக் கொண்டு முன்னாள் நிதி அமைச்சரும் ஆளும் மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ பிரதமர் ரணிலைச் சந்தித்திருக்கிறார். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் அந்தச் சந்திப்பில் இருந்தார்.

21ஆவது திருத்தம் தொடர்பான தமது ஆட்சேபனைகள் சிலவற்றை முன் வைத்துப் பிரதமர் ரணிலுடன் பேசுவது பஸிலின் திட்டமாக இருந்திருக்கும்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முகத்தில் அடிக்கும் விதத்தில் பதில் சொல்லியிருக்கின்றார்.

"21 ஆவது திருத்தம் எனது திட்டமோ, யோசனையோ, பிரேரணையோ அல்ல. அதன் அப்பா யார், அம்மா யார் என்பதும் எனக்கு தெரியாது. அதனை நீங்கள் ஜனாதிபதியிடம்தான் கேட்க வேண்டும். என்னிடம் அல்ல" – என்ற சாரப்பட பதில் அளித்தாராம் பிரதமர் ரணில் என அறிய வந்தது.

அதைக் கேட்டதும் மலைத்துப் போன பஸில் பக்கத்திலிருந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவைப் பார்த்தார். அவரோ தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பது போல வேறு திசையைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

21 குறித்து நீங்கள் பேசி ஏதேனும் மாற்றம் அல்லது நிறுத்தம் கொண்டு வரவேண்டுமானால் அதை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு செய்யுங்கள், எங்களுடன் அல்ல என்ற தகவலை பஸிலுக்கும் தெளிவாகப் புரிய வைத்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இதற்கிடையில் –

நேற்று ஒரு தனியார் ஊடகத்துக்கு பேட்டியளித்த ரணில் –

"நான் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு குறித்துத்தான் சிந்திக்கிறேன். அதைப் பற்றி மட்டும்தான் நடவடிக்கை எடுக்கிறேன். அரசியல் விவகாரத்தில் எனக்கு அதிக சிரத்தை இல்லை. அதை நான் கவனத்தில் எடுத்து, அதற்காகத் தேங்கி நிற்கப் போவதில்லை" – என்றார் பிரதமர்.

"அரசியலில் நீங்கள் என்ன உருட்டு உருட்டினாலும் அதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். என் இலக்கில் காய்களை நகர்த்திக் கொண்டு இருப்பேன்." – என்பதுதான் ரணில் தெரிவிக்கும் செய்தி. இது நம்மவர்களுக்கும் புரிந்தால் நல்லது.

– மின்னல் –

## தங்காலயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
காயமடைந்துள்ளனர்.

தெற்கில் கடந்த மூன்று நாள்களில் இது நான்காவது சூட்டுச் சமபவமாகும். அளுத்கம, அகங்கம, பாணந்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் தலா ஒருவர் கொல்லப்பட்டிருந்தனர்.

## திக்கத்தில் மூவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இணைந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திக்கம், தும்பளை மற்றும் பலாலி அந்தோணிபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டு உள்ளனர் எனவும், அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## அரச ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தாகவும், விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமைகளில் சில அலுவலகங்கள் குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்படலாம் என்ற அடிப்படையில் இந்த முன்மொழிவு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில அலுவலகங்கள் வெள்ளிக்கிழமை சேவைகளுக்காக மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையில் –

சகல வெள்ளிக்கிழமைகளிலும் அரச சேவையாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கான யோசனை ஒன்று எதிர்வரும் நாள்களில் முன்வைக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

## '21' குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முன்னதாக, முன்மொழியப்பட்ட அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமாக கலந்துரையாடுவ தற்காக தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன மெய்நிகர் வழியில் கூடிப் பேசியிருந்தன.

இதன்போது, தற்போது அரசமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் குறித்து தமிழர் தரப்பு விசேட கரிசனை செலுத்த வேண்டுமா, அதில் எவ்விதமான வகிபாகத்தினைச் செய்வது என்பன தொடர்பில் அவை ஆராய்ந்திருந்தன.

இந்த நிலையில், பிரதமர் ரணில் தலைமையில் இரண்டாவது கூட்டம் நடத்தப்படவிருந்தமையால் அது நிறைவடையும் வரையில் தமிழ்க் கட்சிகளும் தமது கூட்டத்தினைத் தாமதத்திருந்தன.

பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் எவ்வாறான இணக்கப்பாடுகள் எட்டப்படுகின்றன என்பதை அவதானித்த பின்னர் அடுத்தகட்டமான செயற்பாடுகளை முன்னெடுப்பதென அப்போது தீர்மானித்திருந்தன.

பிரதமர் ரணில் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் 21 ஆவது திருத்தம் குறித்து பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில் நாளை கூடும் தமிழ்க் கட்சிகளும் தமது இறுதியான நிலைப்பாட்டினை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் கூட்டமைப்பு எம்.பிக்களான சிறீதரன், சுமந்திரன், சித்தார்த்தன் ஆகியோரும் மன்னாரில் தங்கியிருக்கும் செல்வம் உட்பட ரெலோ உறுப்பினர்களும் நாளை நடைபெறும் நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கு பெறுவதற்காக இன்று பிற்பகலில் கொழும்பு பயணமாகிறார்கள். அந்த பயணத்தின் வழியில், இன்று பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவில் ஒன்று கூடி 21 ஆவது திருத்தம் குறித்து தங்களுக்குள் கலந்துரையாட ஏற்கனவே அவர்கள் முடிவு செய்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் செயலாளரும் பங்குபற்றக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு சிறீதரன், சுமந்திரன் போன்றோர் கொழும்பு பயணமாவார்கள். அதனால் இன்று மாலை 6 மணிக்கு ஏனைய தமிழ் கட்சிகள் சேர்ந்து மெய்நிகரில் ஒன்றுகூடி கலந்துரையாட ஏற்பாடு செய்திருக்கும் கூட்டத்தில் அவர்கள் பங்குபற்ற மாட்டார்கள் எனத் தெரிகிறது.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஆகியவற்றுடன் மேற்கொண்ட பேச்சுகளை தொடர்ந்தே ஐ.நா. இந்த வேண்டுகோளை விடுக்கவுள்ளது.

இந்த வேண்டுகோள் பெரும்பாலும் நாளை மறுதினம் புதன்கிழமை விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உணவு விவசாயஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி விமலேந்திர சரான், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மலின் ஹேர்விக் ஆகியோருடன் நாட்டின் தற்போதைய உணவு நிலை குறித்து பேச்சுகளைத் தொடர்ந்தே ஐநா. இந்த வேண்டுகோளை விடுக்கவுள்ளது.

உணவுத் தட்டுப்பாட்டு ஆபத்துக் காரணமாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கி வருகின்றனர் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

விவசாயத் துறை தற்போது எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினை உரம், எரிபொருள் தட்டுப்பாடு எனத் தெரிவித்துள்ள பிரதமர், தற்போதைய உணவுத் தட்டுப்பாட்டிற்குத் தீர்வைக் காண்பதற்காகத் தான் உருவாக்கியுள்ள நகர விவசாய முயற்சி குறித்தும் எடுத்துரைத்துள்ளார்.

## லாஃப்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ரூபாயாக அதிகரித்துள்ளது.

இன்று முதல் எரிவாயு சிலிண்டர்களை குறித்த நிறுவனம் சந்தைக்கு விநியோகிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அட்மிரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவரது, தனிப்பட்ட பின்னணி அடங்கிய ஆவணம், ஏற்கனவே ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த ஆவணம் ஏற் றுக் கொள்ளப்பட்டால், அவர் ஜப்பானிய தூதுவராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ்.பல்கலைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மீதும் அவர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டபோது ஏனைய மாணவர்கள் ஒன்று சேர்ந்த அந்த இருவரையும் மடக்கினர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் தாக்குதல் நடத்திய இருவரையும் கைது செய்தனர்.

## டொலர், யூரோக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

## யாழ்.பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. பொன் சிவகுமாரன் உருவப்படத்திற்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலி செலுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மித்த பகுதியில் நேற்றிரவு குற்றுயிராக கிடந்த ஒருவரை அவதானித்த கடை உரிமையாளர் ஒருவர் 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை எடுத்து தகவல் கொடுத்தார். அந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. உயிரிழந்தவர் உடலில் போத்தலினால் குத்தப்பட்டு அதிகளவு இரத்தபெருக்கெடுத்துஜ் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் அருகில் உள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி மற்றும் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆங்கிலக் கற்கை நெறி





மேற்கத்தைய நாடுகளில் சுகாதார துறைசார் தொழில்வாய்ப்பிற்கான ஆங்கில கற்கைநெறியானது (OET) 27.05.2022 ஆரம்பிக்கப்பட்டு IMS மானிப்பாய் இல் நடைபெற்று வருகின்றது.

**வளவாளர் - ரமணி வாகீசன்**
(Director, iLEAP, Club Pvt)

அனுசரணையாளர்:–
**சிறி கனக துர்க்கை அம்மன் நிதியம்**

Occupational English Testing (OET) Course was started on 27 th May 2022@Ims Manipay.
Resource Person - **Ms.Ramani Vaakeesan**,
(Director, iLEAP, Club Pvt)
**Funding - Sri Kanagathurkai Amman Trust**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கனலும் நெருப்பு

'ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின்னர் நீ யாரோ, நான் யாரோ…!' – என்று ஒரு பேச்சு மொழி உண்டு. நம் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் அப்படித்தான் போலும்.

கடந்த மே 9ஐ அடுத்து நாட்டில் ஆளும் தரப்புக்கு எதிராக வெடித்த களேபரங்கள், எழுந்த உணர்வலைகளை அடுத்து ஓடி ஒளித்த அரச தரப்பினருக்கு இப்போது மீண்டும் உஷார் வந்து விட்டது போலும்.

நாட்டின் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் இருந்தவர் கூட – இப்போதைய ஜனாதிபதியின் அரசியல் வழிகாட்டிம் கூட – ஆளும் கட்சியின் தலைவரும் கூட – பாதுகாப்புக்குத் திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு ஓடிப்போய் ஒதுங்க வேண்டிய இக்கட்டு ஏற்பட்டதை ஆளும் தரப்பினர் மறந்து விடக் கூடாது.

இப்போது பிரஸ்தாபிக்கப்படும் 21,ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பினர் துள்ளிக் குதிப்பதைப் பார்த்தால், ஒரு மாதத்துக்கு முன்னர் இந்த நாட்டில் கட்டவிழ்ந்த மனநிலையை – அவர்கள் ஒவ்வொருவரும் ஓடி ஒளிந்து, பம்மி, மறைந்து இருந்தமையை – அவர்கள் மறந்து விட்டனர் என்றுதான் தோன்றுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 லட்சம் வாக்குகள் விழுந்தன என்பதும், அதன் பின்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியது என்பதும் உண்மைதான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்கள் வழங்கிய அந்த ஆணையை அவர்களே பிடுங்கிக் கொண்டார்கள் என்பதுதான் 'கோட்டா ஹோம்' போராட்டத்தை ஒட்டியும், மே 9 ஐ அடுத்து நாட்டில் அரங்கேறிய சம்பவங்களில் இருந்தும் நாம் கற்றுக் கொண்ட பாடம். படிப்பினை.

கடந்த பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் பெருவெற்றியீட்டிய ராஜபக்ஷக்களில், அரசியலில் மூத்தவரான மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியைத் துறந்து ஓடி ஒளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதும், ஆக ஒரேயொரு ஆசனத்தை மட்டும் – அதுவும் நாடு முழுவதிலும் கிடைத்த இரண்டரை லட்சம் வாக்குகளினால் தொத்துப் பொறியில் கிட்டிய தேசியப் பட்டியல் ஆசனத்தை மட்டும் – வென்ற ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கூட்டிவந்து பிரதமர் பதவியில் ஜனாதிபதி அமர்த்த வேண்டிய கட்டாயம் நேர்ந்ததும், இந்த மக்கள் ஆணை இழப்பை அதிகாரவர்க்கம் புரிந்து கொண்டமையால் ஏற்பட்ட யதார்த்தப் புறநிகழ்வுகள்.

அதனை மறந்து ஆளும் தரப்பு எம்.பிக்கள், பிரமுகர்கள் சிலர் அதிகப் பிரசங்கித்தனமாக இப்போது வியாக்கியானம் பிளக்கின்றார்கள்.

69 லட்சம் வாக்குப் பெற்ற ஜனாதிபதியின் அதிகாரங்களை மக்கள் ஆணைபெறாத ரணில் விக்கிரமசிங்க 21ஆவது திருத்தம் மூலம் நீக்க முயற்சிக்கலாமா என்று அவர்கள் கேட்பது, ஜனாதிபதிக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வழங்கிய ஆணையை மக்கள் திரும்பப் பெற்று விட்டார்கள் என்ற யதார்த்தத்தை மறைத்துப் பேசும் கருத்தாகும்.

ஆணையை இழந்து, அடுத்து என்ன செய்வது என்ற அரசியல் பரிதவிப்பில் நின்ற கோட்டாபயவுக்கு அரசியல் நெருக்கடி என்ற ஆற்றைக் கடப்பதற்கு உதவ முன்வந்தவர்தான் ரணில் விக்கிரமசிங்க.

இப்போது அரசியல் நெருக்கடி எனும் ஆற்றைக் கடந்து விட்டோம் என்ற எண்ணத்தில் – தப்பிதக் கருத்தில் – இருக்கும் ஆளும் தரப்பினர், 'நீயாரோ, நான் யாரோ' என்று ரணிலைப் புறம் ஒதுக்க முயல்கின்றார்கள் போலும். மேயில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி அணைந்து விடவில்லை. அது நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டுதான் இருக்கின்றது என்பதை அவர்கள் மறக்காமல் இருப்பது நல்லது.

# இருதரப்பு உறவு பாதிக்கப்பட முன்னர் ரஷ்யப் பிரச்சினையைத் தீர்த்திடுங்கள்

## அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆலோசனை

ரஷ்ய 'ஏரோப்ளோட்' விமானம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண விரைவாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரஷ்ய 'ஏரோப்ளோட்' விமானம் ஒன்று இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புக்கான விமான சேவைகளை அந்த நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

எனவே இரு நாடுகளுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையில் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.




கொரகபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

# மருத்துவ உபகரணங்களை வழங்கியது இந்தியா



இந்திய அரசாங்கத்தால் 1990 'சுவசரிய' அம்புலன்ஸ் சேவைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 3.3 தொன் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவால் 'சுவசரிய' பவுண்டேஷனின் தலைவர் துமிந்த ரத்நாயக்கவிடம் கையளிக்கப்பட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கடந்த மார்ச் மாதம் கொழும்பிலுள்ள 'சுவசரிய' தலைமைக் காரியாலயத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, அவர்கள் மருந்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்திருப்பது தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. அதற்கான உடனடி நடவடிக்கையாக இலங்கைக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களை அனுப்பிவைப்பதற்கு கரியல் என்ற இந்தியக்கப்பல் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

அக்கப்பல் ஊடாக 'சுவசரிய' பவுண்டேஷனுக்குரிய மருத்துவ உபகரணங்களுக்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை தேசிய வைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களும் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

'சுவசரிய' அம்புலன்ஸ் சேவை நாட்டின் 25 மாவட்டங்களிலும் இயங்குவதுடன், இது மக்களை மையப்படுத்தி இலங்கைக்கான அபிவிருத்தி ஒத்துழைப்புக்களை இந்தியா வழங்கிவருகின்றமைக்குச் சிறந்த உதாரணமாகும் என்று இலங்கைக்கான இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த அம்புலன்ஸ் சேவை, இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சுமார் 2 கோடியே 2 லட்சம் அமெரிக்க டொலர் கடனுதவியின் மூலம் கட்டமைக்கப்பட்டது. இது உயிர்களைப் பாதுகாப்பதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவால் கடந்த இருமாத காலத்தில் சுமார் 37 கோடி இலங்கை ரூபா பெறுமதியான 25 தொன்களை விடவும் அதிகமான மருத்துப்பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புக்கான வர்த்தக விமான சேவையை ரஷ்ய ஏரோ ப்ளோட் நிறுவனம் நிறுத்தியது!

எயார்பஸ் ஏ330 விமானம் கட்டுநாயக்கவில் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து, ரஷ்ய விமான நிறுவனமான ஏரோ ப்ளோட் இலங்கைக்கான விமானங்களை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்துள்ளது.

தடையில்லாமல் விமான சேவை இடம்பெறும் என்பதில் நம்பிக்கை இல்லை என்பதால் இலங்கைக்கான சேவைகளையும் டிக்கெட் விற்பனையையும் இடைநிறுத்துவதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி ஜூன் 2, 4 மற்றும் 5 திகதிகளில் கொழும்பில் இருந்து மொஸ்கோவிற்குத் திரும்பும் பயணிகள் ஜூன் 4 மற்றும் ஜூன் 5 ஆம் திகதிகளில் புறப்படும் விமானங்கள் மூலம் நாடு திரும்பலாம் என்றும் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி இலங்கையில் விமான சேவையை ஆரம்பித்த ரஷ்யாவின் ஏரோ ப்ளோட் விமான நிறுவனம் எட்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளது.

குத்தகை நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடந்த 2ஆம் திகதி, ரஷ்ய விமானம் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு 16 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சு மொஸ்கோவிற்கான இலங்கைத் தூதுவர் ஜனிதா அபேவிக்ரம லியனகேவை வரவழைத்து விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.




# சின்ஜியாங் பிரதேசத்தில் சீனா பெரும் மனித உரிமை மீறல்கள்!




ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் மைக்கேல் பச்லெட்டின் சமீபத்திய சீனா மற்றும் சின்ஜியாங்கிற்கான விஜயம் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே புரிந்து கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள், மட்டுப்படுத்தல்களுடன்தான் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் சீன விஜயத்துக்கு உட்படுத்தப்படுவார் என்பதால் அவர் கணிசமான எதையும் அங்கு பார்க்கவோ, அவதானிக்கவோ வாய்ப்பில்லை என்று சுட்டிக்காட்டிய சின்ஜியாங்கில் உய்குர் மீதான துன்புறுத்தல் குறித்த தனது அறிக்கையை வெளியிடுமாறு பச்லெட்டை கோரியுள்ளது.

அதே நேரத்தில், சீனா தொடர்பான சர்வேதசநாடாளுமன்றக்கூட்டமைப்பின் 18 நாடுகளைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு வெளியிட்ட ஒரு திறந்த மடலில், வெளிப்பகட்டுக்கு – வெளிவேஷத்துக்கு – படம் காட்டுவது போன்ற 'பொட்டெம்கின் பாணி' சுற்றுப் பயணத்தை சீனா ஏற்பாடு செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இது பச்லெட் அம்மையாரின் அலுவலகத்தின் நம்பகத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் விடயம் என்றும் அந்த மடல் விமர்சித்தது.




கொவிட் – 19 இன் டசின் கணக்கான தொற்றுப் பரவல் வெடிப்பைச் சமாளிக்க சீனா விதித்துள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பச்லெட் அம்மையாரின் நடமாட்டங்கள் மற்றும் கூட்டங்கள், சந்திப்புகளை கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.




சின்ஜியாங்கில் உள்ள முஸ்லிம் உய்குர் சிறுபான்மையினர் மற்றும் பிறருக்கு எதிராகக் கூறப்படும் உரிமை மீறல்கள் விடயங்கள் தொடர்பான பணியில் பச்லெட் குழுவின் எந்தத் தலையீட்டுக்கும் ஆதரவு வழங்கப்படும் என்று ஜெனிவாவில் உள்ள ஐ.நா. நிறுவனங்களுக்கான அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதி, தூத பொக்ரோக்கர் பச்லெட் குழுவின் விஜயத்துக்கு முன்னர் கூறினார் என உள்ளூர் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் மற்றும் அவரது குழுவினரின் விஜயம் அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றன எனப் புகாரளிக்கப்பட்ட இடங்களுக்கான அணுகலையும் உள்ளடக்கியதாக அமைந்தால்தான் அது நம்பகமானதாக இருக்கும் என்று க்ரோக்கர் கூறினார். ஐ.நா. மனித உரிமைகள் தலைவரின் ஆறு நாள் பயணத்தில் (மே 23) சின்ஜியாங்கிற்கான விஜயமும் அடங்கியிருந்தது.

பச்லெட், சின்ஜியாங்கில் பரவலான முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து பலமுறை கவலை தெரிவித்திருந்தார். ஆனால் அவர் சீனாவுடன் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்றும் விமர்சிக்கப்பட்டார்.

சின்ஜியாங்கிற்கு அர்த்தமுள்ள மற்றும் தடையற்ற அணுகலுக்கான கோரிக்கைகளுடன் பச்லெட் பயணம் நீண்ட காலமாகக் காத்திருப்பில் இருந்தது.

சீனா, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையத்தின் தலைவருக்கு வழிகாட்டும் சுற்றுப் பயணத்தை வழங்குமா அல்லது அவருக்கு யதார்த்தத்தை காட்டுமா என்ற கேள்விகளை அவரின் சுற்றுப்பயணத் துக்கு முன்னரே அமெரிக்கா எழுப்பியிருந்தது. யதார்த்தத்தை வெளிப்படையாகக் காட்டுவது சாத்தியமற்றது என்பதால், ஓர் உயர்மட்ட வருகை பயனுள்ள வகையில் களமிறங்குவதற்குப் பதிலாக ஒரு முரணிலையுடன் முடிவடையும் என்பதற்கான அறிகுறிகளே தென்பட்டன.

(07ஆம் பக்கம் பார்க்க)

# கூலி வேலைகள் செய்யும் மக்களின் நிலை மோசம்!

## செல்வம் அடைக்கலநாதன் வேதனை



பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் சேமித்து வைத்த அரிசிகள் அனைத்தும் இரண்டு, மூன்று மாதங்களில் முடிவடையக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இனிவரும் காலங்களில் பட்டினிச்சாவுகள் வருவதற்கான வாய்ப்புகளே கூடுதலாக உள்ளன.

சாதாரணமாக உழைக்கின்ற அன்றாட கூலி செய்கின்ற மக்களுடைய நிலைமை மிகவும் மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது.

அரசாங்கம் முதலிலே பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்ற போது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கின்ற வாழ்க்கையை உண்டு பண்ணலாம்.

பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுப்பதன் ஊடாக நெல் உற்பத்தி பெருகும். அதேபோல் தோட்டங்களை செய்கின்ற போது மரக்கறிகளை செய்கின்ற வாய்ப்புக்களும் ஏற்படும்.

அரசாங்கம் பசளையை விவசாயிகளுக்கு இறக்கி கொடுப்பதன் ஊடாக தான் பட்டினியில் இருந்து மக்களை மீட்க முடியும்.

இந்திய பிரதமர் இந்த விடயத்திலே கவனம் செலுத்தி உடனடியாக பசளையை தந்துதவுமாறு கேட்டிருக்கின்றேன்.

பசளை கிடைக்கின்ற போது ஓரளவிற்காவது பட்டினியை நிவர்த்தி செய்கின்ற வாய்ப்புகளை உண்டு பண்ணலாம் என்பது எனது ஆலோசனை என மேலும் தெரிவித்தார்.

# ரூ. 14 லட்சம் சம்பளம் பெறும் அமைச்சின் செயலாளர்

## சிங்கள ஊடகம் தகவல்

சக்தி வாய்ந்த அரசியல்வாதி ஒருவரின் அமைச்சுப் பதவி வகிக்கும் நாட்டின் முக்கிய அமைச்சின் செயலாளர் ஒருவரின் மாதாந்த சம்பளம் 14 லட்சம் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், மேலதிக நேர சம்பளத்துக்குக் கூட அவர் தகுதியானவர் எனவும் அமைச்சின் செயலாளரின் பிரத்தியேக செயலாளரின் சம்பளம் 04 லட்சம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சம்பந்தப்பட்ட செயலாளர் நிதித்துறையுடன் தொடர்புடைய முன்னணி நிறுவனமொன்றில் முன்னர் பணிபுரிந்தவர். அவரது தற்போதைய சம்பளம் அந்த நிறுவனத்தின் சம்பள அளவை அடிப்படையாகக் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த செயலாளரின் பலம் வாய்ந்த அமைச்சரும் ஒரு லட்சம் ரூபாவுக்கும் குறைவான சம்பளத்தையே பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இவ்வேளையில் அரச உத்தியோகத்தர் ஒருவர் லட்சக்கணக்கான ரூபா சம்பளம் பெறுவது தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயலாளரின் பலம் வாய்ந்த அமைச்சர் அவ்வப்போது பொதுச் செலவினங்களுக்காக மக்கள் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்குமாறும் தற்போதைய சூழ்நிலையில் மக்களைத் தியாகம் செய்யுமாறும் விசேட அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை முற்றுமுழுதாக ஒழிக்கவே கூடாதாம்!

## ஹாபிஸ் நசீர் கருத்து



நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறையை முற்றாக ஒழிக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஆபத்தானவை, இந்தப் பதவிக்கு வரும் ஆள்களைப் பொறுத்தே, இதன் ஆழ, அகலங்கள் அறியப்படுகின்றன என முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் தெரிவித்தவை வருமாறு–

நிறைவேற்றதிகாரம் மக்களுக்கான உச்ச பாதுகாப்பளிக்கிறது. கடந்தகாலங்களில் அனுபவிக்க நேர்ந்தவைகள் சிலவற்றால், இந்தப் பதவியை ஒழிக்க வேண்டுமென்ற கோஷங்கள் எழுந்துள்ளன. ஆனால், இதை, ஒழிக்கக் கூடாதென்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. அந்தக் கட்சியின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் தெளிவான நிலைப்பாடும் இதுவே. மக்களால், நேரடியாகத் தெரிவு செய்யப்படும்போதுதான் எல்லோருக்குமான எங்கள் ஜனாதிபதி என்ற உரிமையிருக்கும். இலங்கையில் உள்ள அத்தனை பிரஜைகளும் வாக்களிப்பதால் ஜனாதிபதிக்கும் ஒரு கடப்பாடு ஏற்படுகின்றது.

மாறாக நாடாளுமன்றம் பிரதமர் ஒருவரை தெரிவு செய்வதால் அவர், ஒரு மாவட்டத்துக்கு அல்லது பிரதேசத்துக்கு உரியவராகவே அர்த்தப்படும். அதுமட்டுமல்ல, தேர்தலூடான தெரிவு வரும்போதுதான், சமூகங்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவருக்கு ஏற்படும். குறிப்பாக சிறுபான்மை மக்களின் தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு அவர் கடமைப்பட்டவராகிறார். ஏதாவதொரு அவசர தேவைகளை அடைந்து கொள்ள ஜனாதிபதியுடனுள்ள உறவுகள் அல்லது புரிந்துணர்வுகள் வழிவகுக்கும்.

இவ்வாறு, பலவிடயங்கள் கடந்தகாலங்களில் பெறப்பட்டுள்ளன. தனியொருவரின், மனநிலைகளுக்காக, இந்த அதிகாரத்தையே முற்றாக ஒழிக்குமாறு கோருவது அர்த்தமுள்ள சிந்தனையாகாது. – என்றார்.

# ரஷ்ய முறுகலைத் தவிர்க்க கடும் முயற்சியில் இலங்கை!

ரஷ்ய ஏரோப்ளோட் விமானம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் உயர் மட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், விமானம் தடுத்து நிறுத்தப்பட்டதற்கான நீதிமன்ற வழக்கு இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


இதேவேளை, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார்.

இதற்கிடையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விமானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ரஷ்ய விமானச் சேவை நிறுவனமான ஏரோப்ளோட் மொஸ்கோவிற்கும் கொழும்புக்கும் இடையிலான விமானங்களைத் தற்காலிகமாக நிறுத்தத் தீர்மானித்துள்ளது.

ரஷ்ய ஏரோப்ளோட் ஏ330 ரக விமானம் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுத்து கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தடை உத்தரவைப் பிறப்பித்தது.

அயர்லாந்து விமான நிறுவனம் ஒன்றால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டைப் பரிசீலித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர் சேதுங்க, பிரதிவாதியான ரஷ்ய விமான சேவைக்கு இந்தத் தடை உத்தரவை பிறப்பித்தார். இந்த நிலையில் தடை உத்தரவை நீக்குமாறு ஏரோப் ளோட்டின் கோரிக்கையை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் எதிர்வரும் புதன்கிழமை பரிசீலிக்கவுள்ளது. குத்தகை கொடுப்பனவில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.





# இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை மோட்டார் சைக்கிள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதே மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது.

அதற்கமைய, இலங்கையர் ஒருவர் இந்த நெருக்கடிக்கு வெற்றிகரமான தீர்வைக் காண முன்வந்துள்ளார்.

இயாஸ் பசூல் என்பவர், நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த மோட்டார் சைக்கிளை இரண்டு முறையில் பயன்படுத்த முடியும். சாதாரண சைக்கிளாகவும் அதனை பயன்படுத்த முடியும். ஒரு முறை சார்ஜ் செய்தால் 60 கிலோ மீற்றர் பயணிக்க முடியும்.

மற்ற முறையில் மோட்டார் சைக்கிளாக பயன்படுத்தியும் பயணிக்க முடியும். அந்த முறையில் 30 கிலோ மீற்றர் பயணிக்க முடியும். 4 மணித்தியாலங்கள் அதனை சார்ஜ் செய்தால் அரை யுனிட் மாத்திரமே செலவாகும்.

இந்த சைக்கிளுக்கு தலைக் கவசம், அனுமதி பத்திரம் எதுவும் தேவையில்லை.

கையடக்க தொலைபேசிகள் மூலம் குறித்த மோட்டார் சைக்கிளை செயற்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் உணவுக்குப் பாரிய தட்டுப்பாட்டு அவலம்!

பொரளை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தற்போது உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, குறித்த வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையிலேயே தற்போது இந்த நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், வைத்தியசாலையில் உள்ள குழந்தைகளுக்கு வழங்கும் தினசரி உணவில் இறைச்சி, மீன், முட்டை, பருப்பு உள்ளிட்ட புரதச்சத்துமிக்க உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீக்காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு தினமும் முட்டைகள் கொடுக்க வேண்டும் என்ற போதிலும், தற்போது குறித்த சத்துமிக்க உணவு வகைகளை கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில், தற்போது சிறுவர்களுக்கு ஒரு கொடையாளரிடமிருந்து குறைந்த எண்ணிக்கையிலான முட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவை முடிந்த பின்னர் அந்தக் குழந்தைகளுக்கு முட்டைகளை வழங்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்படும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# புரிந்துணர்வுடன் முன்னேறுவதே நாட்டினை மீட்பதற்கு ஒரே வழி!

முன்னோடியான கலந்துரையாடலை மேற்கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்தி முன்னேறுவதே நாட்டை முன்னோக்கிச் செல்ல ஒரே வழி என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர், அனைவரையும் ஒன்றிணைத்து இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் பணியாற்றுவது அவசியம் என்றும் அவர் கூறினார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் பதவியில் இருப்பவர்களைப் பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய முன்னாள் அமைச்சர், பதவி விலகல் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும், அதே நேரத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, உற்பத்தி அடிப்படையிலான பொருளாதாரத்தை நோக்கிச் செல்வதே இலங்கையின் முன்னோக்கிய ஒரே வழி என வலியுறுத்திய அவர், சுற்றுலாத் துறைக்கு பயனளிக்கும் வகையில் இலங்கையை மேம்படுத்தி, வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு வருமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.

எப்படி கோஷமிட்டாலும், எந்தவொரு கோஷமும் நாட்டுக்கு பொருளாதார ரீதியில் உதவாது என முன்னாள் அமைச்சர் தெரிவித்தார்.

எனவே, முன்னோடியான கலந்துரையாடல் மற்றும் புரிந்துணர்வுக்கு வருவதே சிறந்ததாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். ‘அதன்பிறகு, ஒரு தேர்தலில், நேரம் வரும்போது மக்கள் தங்களைத் தீர்மானிக்க வேண்டும்’ என்று அவர் மேலும் தெரிவித்தார்.



## புதிய இராணுவத் தளபதிக்கு எதிராகவும் போர்க் குற்றச்சாட்டு

புதிய இராணுவத் தளபதி விகும் லியனகே மீதும் போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ஊடகம் ஒன்று இது தொடர்பாகச் செய்தி வெளியிட்டுள்ளது. புதிய இராணுவத்தளபதிக்கு எதிராக புலம்பெயர் விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

விகும் லியனகே கஜபாகு படையணியில் விஸ்வமடு, புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் சேவையாற்றினார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எவ்வித ஆதாரமும் இன்றி இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜெனிவா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

விகும் லியனகே போர்க்குற்றங்களை இழைத்தார் என சாட்சியமளிக்க ஐரோப்பாவில் உள்ள 200 முன்னாள் விடுதலைப் புலிகள் செயற்பாட்டாளர்கள் முன்வந்துள்ளனர் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## ரயிலில் மோதுண்டு இரு யானைகள் பலி

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் சென்ற ரயிலில் சனிக்கிழமை அதிகாலை மோதுண்டு தலபத் கந்த ரயில் நிலையத்திற்கு அருகில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளமையுடன் மற்றொரு யானை காயமடைந்துள்ளதாகவும் கல்ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காட்டு யானைகளால் ஏற்பட்ட விபத்தால் ரயில் தடம் புரண்டதுடன் ரயில் சேவையும் பாதிக்கப்பட்டு இருந்தது. இதன் காரணமாக கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டு இருந்தன எனவும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

விபத்தில் 4 வயதுடைய யானை ஒன்றும் ஒரு வயது குட்டி யானை ஒன்றும் உயிரிழந்துள்ளதுடன் 15 வயதுடைய மற்றொரு யானை படுகாயமடைந்து உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கல்ஓயா காட்டில் இருந்து அதிக எண்ணிக்கையிலான காட்டு யானைகள் குடிதண்ணீருக்காக இப்பகுதிக்கு அடிக்கடி வந்து செல்கின்றன.

இதன் போதே ஏராளமான காட்டு யானைகள் ரயிலில் அடிபட்டு இறக்கின்றன எனவும் இதற்கு முன்னரும் இவ்வாறு பல முறை விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சின்ஜியாங் பிரதேசத்தில் சீனா ..........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரவாத எதிர்ப்பு மையங்கள் மற்றும் மறு கல்வி மையங்களில் ஒரு மில்லியன் உய்குர் மக்கள் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதை 2018 இல் ஐ.நா. கூட ஒப்புக்கொண்டதை நினைவில் கொள்ள வேண்டும்.

லூயிஸ் ஆர்பர் 2005 இல் பயணம் செய்த பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் ஒருவர் சீனாவுக்கு மேற்கொண்ட முதல் பயணத்தை இந்த விஜயம் குறிக்கிறது.

“ஐ.நா.உயர் ஆணையர் அவர்கள் பார்க்கக் கூடாது என சீன அரசாங்கம் விரும்பும் எதையும் அவர் பார்ப்பதற்கு சீனா அனுமதிக்கும். மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை அவர் பாதுகாப்பாகவும், கண்காணிக்கப்படாமலும்,அவர்கள் பின்னர் பழிவாங்கப்படுவார்கள் என்ற பயம் ஏற்படாத நம்பிக்கையுடனும் பேசவும் ஒழுங்கு செய்யப்படும்” – என இந்த விஜயத்துக்கு முன்னர் சீனாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் சோபி ரிச்சர்ட்சன் இந்தப் பயணத்துக்கு முன்னர் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைக் குழுக்களின் பிரதிநிதிகள் ஐ.நா. ஆணையரின் வருகையின் காலம், நேரத்துடன் முன்னரே வெளியிடப்படவில்லை என்றும், நட்புப் பயணத்தில் மட்டுமே ஆர்வமாக இருப்பதாக எப்போதும் வலியுறுத்தி வரும் சீன அதிகாரிகள், பயணத்தைப் புரட்டிப் போட்டுக் கையாளலாம் என்றும் கவலை தெரிவித்தனர்.

உத்தேசப் பயணம் நட்பார்ந்தது மற்றும் விசாரணை நோக்கில் ஒழுங்கமைக்கப்படவில்லை என்ற முன் நிபந்தனை அடிப்படையில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு, 2022 முதல் பாதியில் சின்ஜியாங்கிற்குச் செல்ல பச்லெட் அனுமதிக்கப்படுவார் என்று ஜனவரி 2022 இல், ‘சவுத் சைனா மார்னிங் போஸ்ட்’, சீன வெளியுறவு அமைச்சகத்தின் ஆதாரங்களை மேற்கோள்காட்டி, செய்தி வெளியிட்டிருந்தது.

சின்ஜியாங்கில் சீனா இனப் படுகொலை புரிந்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டிய நேரத்தில் இது வருகிறது, மேலும் அதிகாரப்பூர்வமற்ற மற்றும் சுதந்திரமான – இங்கிலாந்தை தளமாகக் கொண்ட – தீர்ப்பாயம் 9 டிசம்பர் 2021 இல் பெய்ஜிங் உண்மையில் இனப்படுகொலைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய இராச்சியத்தின் உய்குர் தீர்ப்பாயம், உய்குருக்கு எதிராக சீன அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறப்பு கட்டுப்பாடு மற்றும் கருத்தடை நடவடிக்கைகளே அதன் முடிவை (இனப் படுகொலை என்ற முடிவை) எட்டுவதற்கான முதன்மைக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளது.



“உய்குர் மற்றும் பிற இன சிறுபான்மை மக்களை நீண்டகாலமாக (எண்ணிக்கையில்) குறைப்பதற்கு சீனா வேண்டுமென்றே, முறையான மற்றும் ஒருங்கிணைந்த கொள்கையை மேற்கொண்டது” என்று தீர்ப்பாய விசாரணைகளுக்குத் தலைமை தாங்கிய சர் ஜெப்ரி நைஸ், அதன் குழுவின் கருத்தைக் கூறினார்.

சர் நைஸின் கூற்றுப்படி, சின்ஜியாங்கில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான துஷ்பிரயோகங்களுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் முதன்மைப் பொறுப்பு என்று குழு நம்புகிறது.

தமது விஜயத்தின் போது, உயர் ஸ்தானிகர் தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் உள்ள பல உயர்மட்ட அதிகாரிகளை சந்திக்க உள்ளார் என்று ஆணையரின் அலுவலகம் ஓர் அறிக்கையில் கூறியிருந்தது, மேலும் அவர் சிவில் சமூக அமைப்புகள், வணிக பிரதிநிதிகள், கல்வியாளர்கள், மற்றும் குவாங்சோ பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு விரிவுரை ஒன்றையும் வழங்குவார்” – என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மார்ச் 2022 இல், கிட்டத்தட்ட 200 உரிமைக் குழுக்கள் சின்ஜியாங்கில் உள்ள உரிமைகள் நிலைமை குறித்த நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்ட தமது அறிக்கையை ஐ.நா.ஆணையரின் அலுவலகம் வெளியிட வேண்டும் என்று கோரின.

அறிக்கையை மேலும் தாமதமின்றி வெளியிடுவது அவசியம், எந்த ஓர் அரசும், எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தாலும், சர்வதேச சட்டத்திற்கு அப்பாற்பட்டது அல்ல என்பதோடு உங்கள் (ஐ.நா.ஆணையரின்) அலுவலகத்தின் வலுவான சுயாதீன ஆய்வுக்கும் அப்பாற்பட்டது அல்ல என்ற செய்தியை பாதிக்கப்பட்டவர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் ஒரே சமயத்தில் தெரிவிக்கக் கூடியதாக அனுப்புவது அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் மன்னிப்புச் சபை உட்பட 192 அமைப்புகள் ஓர் அறிக்கை மூலம் கோரின.

சின்ஜியாங்கில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மேற்கத்திய நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே பிரசார மற்றும் தகவல் போர் உள்ளது.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி, பாதுகாப்பு என்ற பெயரில் சின்ஜியாங்கில் பரவலான துஷ்பிரயோகங்களைச் செய்ததாக மனித உரிமைப் பிரச்சாரகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர், இதில் மக்களைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைப்பது, குடும்பங்களை வலுக்கட்டாயமாகப் பிரிப்பது மற்றும் கட்டாயக் கருத்தடை செய்வது ஆகியவையும் அடங்கும்.

சீனா தனது பங்கிற்கு, இந்த வசதிகள் தொழில் திறன் பயிற்சி மையங்கள் என்று கூறியுள்ளது, அவை தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமானவை என்கின்றனர் அவர்கள்.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெரும்பாலான பயிற்சியாளர்கள் மையங்களில் இருந்து பட்டத் தகுதி பெற்றவர்கள் என்று சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், 2020 இல் வெளியிடப்பட்ட ஆஸ்திரேலிய மூலோபாய கொள்கை நிறுவனம் (ASPI) நடத்திய ஆய்வில், தடுப்பு வலையமைப்பு ஆரம்பத்தில் நினைத்ததை விடவும் பெரிதாக இருப்பதையும், விரிவடைந்து வருவதையும், கண்டறிந்தது. செயற்கைக்கோள் படங்கள், சாட்சியக் கணக்குகள், ஊடக அறிக்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ கட்டுமான டெண்டர் ஆவணங்களைப் பயன்படுத்தி, அந்தப் பிராந்தியத்தில் 380 இற்கும் மேற்பட்ட சந்தேகத்திற்குரிய தடுப்பு வசதிகளை அந்த நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.

எனவே ஜின்ஜியாங் மீண்டும் ஒருமுறை கவனத்தை ஈர்த்துள்ளது. இப்பகுதிக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையத்தின் தலைவரின் வருகை குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், ஏதேனும் கணிசமான முடிவுகளைத் தருமா என்பதுதான் பிரச்சினை. இந்த முடிவுக்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்.

முதலாவதாக, சீனர்கள் ஏற்கனவே உய்குர் துன்புறுத்தலின் பதிவை முழுமையாக வெள்ளையடித்துள்ளனர்.


இரண்டாவதாக, உய்குர் இருப்பின் யதார்த்தத்தைப் பார்க்க மைக்கேல் பச்லெட்டை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். இந்த நிலையில் இந்த விஜயத்தை சீனா ஒரு தகவல் தொடர்பு வெற்றியாக பயன்படுத்திக்கொள்ளும் எனத் தெரிகிறது.

**(நன்றி:ஏ.என்.ஐ.)**

# பைபர் ஆப்டிக் கேபிள் இணைப்புக்கள்

## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



இலங்கையில் ஜி.சி.ஈ. சாதாரணதரப்பரீட்சை முடிவடைந்ததும் மின்சாரம் துண்டிப்பு மீண்டும் முடக்கி விடப்பட்டுள்ளது. இந்தச்சூழலில் பொருளாதாரச் செயற்பாடுகள் பல பாதிக்கப்படுவதோடு, தொலைத் தொடர்பு சேவைகளும் பாதிக்கப்படுகின்றன. வீடுகளுக்கு ஒரு அரச தொலைத்தொடர்பு சேவை நிறுவனம் மிகக் கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் பைபர் ஆப்டிக் கேபிள் இணைப்புக்களை வழங்கியிருந்தது. அவற்றை வழங்கும் போது போதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அது மின்சாரம் தடைப்பட்டால் தொலைபேசி அழைப்புக்களையும் துண்டித்து விடும் என்ற தகவலை அழுத்தம் திருத்தமாக வாடிக்கையாளருக்கு வழங்கவில்லை என்ற குறைபாடுண்டு. இதனால் பலர் இன்று சிரமப்படுகிறார்கள் எதிர்வரும் காலங்களில் பதினைந்து மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டால் தொலைபேசி அழைப்புக்களைப் பெறமுடியாது திண்டாடவேண்டியிருக்கும். குறிப்பாக வீடுகளில் உள்ள வயோதிபர்கள் இந்த லாண்ட் லைன் இணைப்புக்களை நம்பியே வீடுகளில் தனியே சீவிக்கிறார்கள். அவர்கள் பலர் தமது பழைய இணைப்புக்களுக்கு அதாவது கொப்பர் வயர் இணைப்புக்களுக்கு திரும்ப விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் கையொப்பமிட்ட ஒப்பந்தம் அதற்கு வழிவிடுவதாக வில்லை ஒப்பந்தத்தை வாசிக்காது கையொப்பமிட்டதால் வந்த வினையிது என பலர் சலித்துக் கொள்



வதையும் காணமுடிகிறது. தற்போதுள்ள ஃபைபர் ஆப்டிக் கேபிள் இணைப்பை மாற்றுவதானால் மேலதிகமாக கொப்பர் இணைப்புக்கான ரவுட்டர் வாங்க வேண்டும் மேலதிக கட்டணம் என்று தொலைத் தொடர்பு நிறுவனம் பைபர் ஆப்டிக் கேபிள் இணைப்பை தக்க வைக்க வாடிக்கையாளர்களை மிரட்ட வேண்டியுள்ளது. அது நாட்டின் கொந்தளிப்பு நிலைமைகளில் ஒரு விடயம் அதை விடுவம். இப்ப தொலைத்தொடர்புத்துறையை மேம்படுத்த வந்த ஒரு நுட்பியல் அவத்தையான பைபர் ஆப்டிக் கேபிள் இணைப்பு பற்றிப்பார்க்கலாம்.

பைபர் ஆப்டிக் கேபிள் என்பது ஒரு வலையமைப்பக்கான கேபிள் ஆகும், இது ஒரு தனிமைப் படுத்தப்பட்ட உறைக்குள் கண்ணாடி இழைகளின் இழைகளைக் கொண்டுள்ளது. அவை நீண்ட தூரம், உயர் செயல்திறன் தரவு நெட்வொர்க்கிங் மற்றும் தொலைத்தொடர்புக்காக சிக்னல்களைக் கொண்டு செல்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. கொப்பர் கேபிள்களுடன் ஒப்பிடும்போது, பைபர் ஆப்டிக் கேபிள்கள் அதிக அலைவரிசையை வழங்குகின்றன மற்றும் நீண்ட தூரத்திற்கு தரவை சிதறலின்றி அனுப்புகின்றன. பைபர் ஆப்டிக் கேபிள்கள் உலகின் பெரும்பாலான இணையம், கேபிள் தொலைக் காட்சி மற்றும் தொலைபேசி அமைப்புகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பைபர் ஆப்டிக் கேபிள்கள் சிறிய லேசர்கள் அல்லது ஒளி - உமிழும் டையோட்கள் மூலம் உருவாக்கப்படும் ஒளியின் துடிப்புகளைப் பயன்படுத்தி தொடர்பு சமிக்ஞைகளைக் கொண்டு செல்கின்றன.

### பைபர் ஆப்டிக் கேபிள்கள் எப்படி வேலை செய்கின்றன?

பைபர் ஆப்டிக் கேபிள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கண்ணாடி இழைகளைக் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் மனித முடியை விட சற்று தடிமனாக இருக்கும். ஒவ்வொரு இழையின் மையமும் 'கோர்' என்றுஅழைக்கப்படுகிறது, இதுஒளிபயணிப்பதற்கான பாதையை வழங்குகிறது. மையமானது கிளாடிங் எனப்படும் கண்ணாடி அடுக்கால் சூழப்பட்டுள்ளது, இது சமிக்ஞை இழப்பைத் தவிர்க்க ஒளியை உள்நோக்கி பிரதிபலிக்கிறது மற்றும் கேபிளில் உள்ள வளைவுகள் வழியாக ஒளியை அனுப்ப அனுமதிக்கிறது.

ஆப்டிகல் பைபர் கேபிள்களின் இரண்டு முதன்மை வகைகள் உள்ளன. ஒற்றை முறை மற்றது பல முறை.

ஒற்றை - முறை பைபர் ஒளியை உருவாக்க மிக மெல்லிய கண்ணாடி இழைகள் மற்றும் லேசரைப் பயன்படுத்துகிறது, அதே நேரத்தில் பல - முறை ஆப்டிகல் பைபர் கேபிள்கள் LEDகளைப் பயன்படுத்துகின்றன.

ஒற்றை - முறை ஆப்டிகல் பைபர் நெட்வொர்க்குகள், செல்லக்கூடிய தரவு போக்குவரத்தின் அளவை அதிகரிக்க அலை பிரிவு மல்டிபிளெக்சிங் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன.

### பைபர் ஆப்டிக் கேபிள்களின் நன்மைகள்

நீண்ட தூர செப்பு கேபிளிங்கை விட ஃபைபர் கேபிள்கள் பல நன்மைகளை வழங்குகின்றன.

பைபர் ஆப்டிக்ஸ் அதிக திறனை ஆதரிக்கிறது. பைபர் கேபிள் எடுத்துச் செல்லக்கூடிய நெட்வொர்க் அலைவரிசையின் அளவு, ஒரே மாதிரியான தடிமன் கொண்ட செப்பு கேபிளை விட அதிகமாக உள்ளது. 10 ஜிபிபிஎஸ், 40 ஜிபிபிஎஸ் மற்றும் 100 ஜிபிபிஎஸ் என மதிப்பிடப்பட்ட பைபர் கேபிள்கள் நிலையானவை.

ஒளி அதன் வலிமையை இழக்காமல் ஒரு பைபர்




கேபிளில் அதிக தூரம் பயணிக்க முடியும் என்பதால், சிக்னல் பூஸ்டர்களின் தேவை குறைகிறது.

ஒரு பைபர் ஆப்டிக் கேபிள் குறுக்கீடுகளுக்கு குறைவாகவே பாதிக்கப்படுகிறது. ஒரு செப்பு நெட்வொர்க் கேபிளை மின்காந்த குறுக்கீட்டிலிருந்து பாதுகாக்க கவசம் தேவைப்படுகிறது. இந்த கவசம் உதவினாலும், பல கேபிள்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படும் போது குறுக்கீடுகளைத் தடுக்க போதுமானதாக இல்லை. பைபர் ஆப்டிக் கேபிள்களின் இயற்பியல் பண்புகள் இந்தப் பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றைத் தவிர்க்கின்றன.

பெரும்பாலான பைபர் ஆப்டிக்ஸ் நகரங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே நீண்ட தூர இணைப்புகளை ஆதரிக்க நிறுவப்பட்டாலும், சில குடியிருப்பு இணைய வழங்குநர்கள் தங்கள் பைபர் நிறுவல்களை புறநகர் சுற்றுப்புறங்களுக்கு வீடுகள் நேரடியாக இணைப்பதற்கு முதலீடு செய்துள்ளனர்.

சந்தையில் உள்ள சில சிறப்பாக அறியப்பட்ட பைபர் - டு - தி - ஹோம் சேவைகளில் Verizon FIOS மற்றும் Google Fiber ஆகியவை அடங்கும். இந்த சேவைகள் வீடுகளுக்கு ஜிகாபிட் இணைய வேகத்தை வழங்க முடியும். இருப்பினும், அவர்கள் பொதுவாக வாடிக்கையாளர்களுக்கு குறைந்த திறன் பேக்கேஜ் களையும் வழங்குகிறார்கள்.




பைபர் ஆப்டிக் கேபிள் இணைப்புக்காக பின்வரும் சுருக்க வடிவங்களில் அழைக்கப்படுகின்றன. FTTP (பைபர் டு தி பிரைமிசஸ்), FTTB (பைபர் டு தி பில்டிங் பிசினஸ் பிளாக்), FTTC/N (பைபர் டு தி கர்ப் ஆப் நோட) இவை ஒவ்வொன்றும் அவை வழங்கும் சேவைகளை அடிபபடையாகக் கொண் டன.

ஆக, கொப்பர் கேபிளை விட பைபர் ஆப்டிக் சிறந்ததா? என்று கேட்டால் நிச்சயமாகச் சிறந்தது. குறிப்பாக இது மின்சாரம் சம்பந்தப்படாததால், மற்ற வகை அதிவேக இணையத்தை விட, மின் தடையின் போது பைபர் ஆப்டிக் இணையம் நிறுத்தப்படும் வாய்ப்பு குறைவு. மிகவும் நம்பகமானதாக இருப்பதுடன், பைபர் ஆப்டிக் இணையம் பாரம்பரிய இணைய கேபிள்களை விட வேகமானது ஆனால் அதிக செலவு கொண்டது.

கொப்பர் கேபிள் இணையத்துடன் ஒப்பிடும்போது பைபர் ஆப்டிக் இணையம் எவ்வளவு வேகமானது? என்று கேட்டால், கேபிள் தொழில்நுட்பம் தற்போது சுமார் 1,000 Mbps அலைவரிசையை கடத்தவல்லது, அதே நேரத்தில் பைபர் ஆப்டிக் இணையம் 2,000 Mbps வரை வேகத்தை கொண்டது. 1,000 Mbps வேகத்தில், சுமார் 32 வினாடிகளில் 2 மணிநேர HD திரைப்படத்தைப் பதிவிறக்கலாம். 2,000 Mbps வேகத்தில், 2 மணிநேர HD திரைப்படத்தைப் பதிவிறக்குவதற்கு கிட்டத்தட்ட 17 வினாடிகள் ஆகும்.

தொலைத்தொடர்பு நிறுவனங்களால் தொலைபேசி சமிக்ஞைகள், இணையத் தொடர்பு மற்றும் கேபிள் தொலைக்காட்சி சமிக்ஞைகளை அனுப்ப ஆப்டிகல் பைபர் பயன்படுத்தப்படுகிறது. இது மருத்துவம், பாதுகாப்பு, அரசு, தொழில்துறை மற்றும் வணிகம் உள்ளிட்ட பிற தொழில்களிலும் பயன்படுத்தப்படுகிறது. தொலைத்தொடர்பு நோக்கங்களுக்காக சேவை செய் வதோடு, ஒளி வழிகாட்டிகளாகவும், இமேஜிங் கருவி கள், லேசர்கள், நில அதிர்வு அலைகளுக்கான ஹைட்ரோ போன்கள், சோனார் மற்றும் அழுத்தம் மற்றும் வெப்பநிலையை அளவிட சென்சார்களாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.



# பாரம்பரிய கதிர்காம பாத யாத்திரை ஆரம்பம்

கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக தடைப்பட்டிருந்த பாரம்பரிய யாழ்ப்பாணம் – கதிர்காமத்திற்கான பாதயாத்திரை இவ் வருடத்தில் சனிக்கிழமை ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து விஷேட பூசை வழிபாடுகளுடன் பாரம்பரிய பாதயாத்திரை காலை ஆரம்பமாகியது.

வடக்கு – கிழக்கு – ஊவா ஆகிய 03 மாகாணங்களையும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ,மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்களை இணைக்கும் 52 நாள்கள் 572 கி.மீற்றர் தூரம் கொண்ட இலங்கையின் மிக நீண்ட கதிர்காமப் பாதயாத்திரை சனிக்கிழமை 04ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகனாலயத்திலிருந்து விசேட பூஜை புனஸ்காரங்களுடன் ஆரம்பமாகியது.

வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் விழா பேருற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 15 தினங்கள் திருவிழா இடம்பெற்று ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

அதனை முன்னிட்டு ஜூலை மாதம் 20 திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம்...

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர்,



போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளைக் கடந்து, ஆறு நாள்களாகப் பாத யாத்திரை சென்று கதிர்காமப் கந்தனைத் தரிசிகின்றனர்.

1000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரை ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமானத்துக்கே நம்மைக் கூட்டிச் செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மனநிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.



இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இந்தப் பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்தப் பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றைச் சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து,



இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் சத்தியம்....

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**



# ஏ.ஆர்.வி., ஏ.ஆர்.எஸ். தடுப்பூசிகள் ஆதார வைத்தியசாலைகளில் இல்லை!

## நோயாளர்கள் பெரும் அவதி

நாய் கடிக்குரிய தடுப்பூசிகளான ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ். தடுப்பூசிகள் ஆதார வைத்தியசாலைகளில் இன்மையால் நோயாளர்கள் பெரும் அவல நிலையைச் சந்திக்கின்றார்கள்.

அண்மையில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் மாவட்ட செயலாளர் க.மகேசன் ஆகியோர் மாகாண சுகாதாரத் துறையினருடனும் உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளருடனும் தொலைபேசியில் வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பில் சூம் மூலமாக உரையாடினார்கள்.

இந்த உரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மாகாணத்துக்கு உட்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலைகளினதும் தேவைப்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தார். மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் பங்குபற்றிய திட்டமிடல் பகுதி வைத்திய உத்தியோகத்தர் வைத்தியர் மோகனிடம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், விசர்நாய் கடி தடுப்பூசிகளான ஏ.ஆர்.வி., ஏ.ஆர்.எஸ். ஆகியவை வைத்தியசாலைகளில் உள்ளனவா என்று கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த திட்டமிடல் வைத்திய உத்தியோகத்தர் வைத்தியர் மோகன், ஆதார வைத்தியசாலைகளுக்கு மட்டும்தான் இந்தத் தடுப்பூசிகள் விநியோகிக்கின்றோம். அங்கு போதுமான அளவு தடுப்பூசிகள் உள்ளன. தம்மால் முகாமை செய்யும் அளவுக்கு அவை உள்ளன என்றார்.

இதன்போது குறுக்கிட்ட, சங்கானை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி, தங்களிடம் மேற்படி மருந்துகள் இல்லாதமையால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நாம் நோயாளர்களை அனுப்புகின்றோம். ஆனால், அங்கும் தடுப்பூசி இல்லாதமையால் நோயாளர்களைத் திருப்பி அனுப்புகின்றார்கள். – என்றார். இதன்போது ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரும் தமது வைத்தியசாலையில் ஏ.ஆர்.வி மற்றும் ஏ.ஆர்.எஸ். ஆகிய தடுப்பூசி மருந்துகள் இல்லை என்று தெரிவித்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மருந்துகள் ஏதாவது தேவையா என்று மாகாண சுகாதாரத் திணைக்கள திட்டமிடல் மருத்துவ உத்தியோகத்தரிடம் கேள்வி எழுப்ப, அவர் தம்மால் முகாமை செய்ய முடியும். – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இந்த சூம் தொடர்பான கூட்ட வீடியோவைத் தனது முகநூலில் அரசியல் நோக்குக்காகப் பதிவேற்றியுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு உள்ள நிலையில் அதனை அரசியலாக்குகின்ற நாடாளுமன்ற உறுப்பினரையும் உண்மையில் மருந்துத் தேவைகள் இருந்தும் அரசியல்வாதிக்கு ஜால்ரா அடித்து பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் சுகாதாரத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்திய உத்தியோகத்தர் மீதும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள். இந்த சூழ்நிலையிலும் இவர்கள் எமது உயிரோடு விளையாடுகின்றனர் என்று வேதனை தெரிவித்துள்ளனர்.

# ஞானக்காவை கைவிட்ட ஜனாதிபதி கோட்டாபய!

## சர்வதேச மத போதகரிடம் தஞ்சம்

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுக்கான சிம்பாப்வே தூதுவராகப் பணியாற்றும் சுவிசே போதகரும், மோசடியான முறையில் பணம் சம்பாதிக்கும் பிரபல மிஷனரியுமான ஊபோட் ஏஞ்சல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த போது அவர் ஜனாதிபதியை சந்தித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

தனது விஜயம் தொடர்பில் பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்த அவர், சிம்பாப்வே ஜனாதிபதி வழங்கிய விசேட பணி காரணமாக ஜூன் முதலாம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியா, சிம்பாப்வே கலப்பு வம்சாவளியைச் சேர்ந்த ஊபோட் ஏஞ்சல், உலகம் முழுவதும் ஊழியங்களை ஏற்பாடு செய்யும் சர்வதேச பணக்காரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவர் உலகின் பணக்கார போதகர்களில் ஒருவராகக் கூறப்படுகிறது.

மேலும் பணம் சம்பாதிப்பது மற்றும் தவறான வழியில் பணத்தை மீட்பது பற்றிய புத்தகத்தை அவர் எழுதியுள்ளார். இதற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து ஊபோட் ஏஞ்சல் பணம் சம்பாதிக்கும் ஊழியத்தை மேற்கொண்டிருந்தார், அங்கு அவர் ஒரு முழுமையான ஏமாற்று வேலை செய்தார் என அதில் பங்குபற்றியவர்கள் சமூக ஊடகங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

அநுராதபுரத்திலுள்ள பெண் மந்திரவாதியான ஞானக்காவின் தீவிர பக்தரான கோட்டாபய ராஜபக்ஷ, சர்வதேச ரீதியாக ஏமாற்று வேலை செய்யும் மத போகரை சந்தித்துள்ளமை தொடர்பாகச் சர்ச்சை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டை பிரஜாவுரிமை விண்ணப்பங்கள் இலங்கையில் தேங்கிக்கிடக்கின்றனவாம்!

இலங்கையில் இரட்டைப்பிரஜாவுரிமை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஆயிரக்கணக்கில் தேங்கிக்கிடக்கின்றன என நாடாளுமன்ற குழு விசாரணையில் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற பொது கணக்குகள் குழு (கோபா) மேற்கொண்ட விசாரணையின் போது இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைக்கு 22 ஆயிரத்து 388 இற்கும் மேற்பட்ட இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான விண்ணப்பங்கள் பல்வேறு காரணிகளால் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவை கடந்த 2018 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றவையாகும். இவற்றில் 10 ஆயிரத்து 77 விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையும் தெரியவந்துள்ளது.

விண்ணப்பங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளமைக்கான காரணங்கள், பணம் செலுத்துவதில் தாமதம், பாதுகாப்பு விசாரணை அறிக்கை தாமதம், ஆவணங்களில் சிறு குறைபாடுகள், பெருந்தொகையான விண்ணப்பங்களை ஒரே தடவையில் அமைச்சரின் கையெழுத்துக்காக சமர்ப்பிக்கும் போது கைச்சாத்திடுவதில் ஏற்படும் தாமதம் போன்ற விடயங்கள் காரணமாகவே மேற்படி இரட்டைப் பிரஜாவுரிமை விண்ணப்பங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே இலங்கையராக இருந்து வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதற்கான விண்ணப்பங்களும் இவ்வாறு தேங்கிக் கிடக்கின்றன.

மேற்படி விடயங்களை கவனத்திற்கொண்ட நாடாளுமன்ற பொது கணக்குகள் நிலைக்குழு இரட்டைப் பிரஜாவுரிமை விண்ணப்பங்கள் தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

# யோகக்கலை கற்கை புதிய பிரிவு ஆரம்பம்



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு சனிக்கிழமை தொடக்கம் நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இளைஞர் விவகார அலகின் உதவிச்செயலாளர் திருமதி சிவப்பிரியா சுபாஸ்கரன் தலைமையில் ஆரம்பமாகிய இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8 மணி வரை நடைபெறுகிறது.

இவ்வகுப்புகளில் 19 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கிறது.



# ரஷ்ய விமானம் குறித்து நாமல் டுவிட்டர் பதிவு

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய 'ஏரோ ப்ளோட்' விமானம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா இலங்கையுடன் நீண்டகாலமாக சுமுகமான உறவைப் பேணி வருவதாகவும், ஆபத்தான நேரங்களில் ரஷ்யா இலங்கைக்கு ஆதரவளித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கொவிட் தொற்றின் போது கூட ரஷ்யா தொடர்ந்து உதவியதோடு, நமது சுற்றுலாத் துறையையும் புத்துயிர் பெற உதவும் வகையில் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்பியிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு

## வைத்தியர் தீபால் பெரேரா கருத்து

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையில் 20 வீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையின் குழந்தைகள் நல சிறப்பு வைத்தியர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்குத் தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமையே இதற்கு முக்கிய காரணம் என விசேட வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

கடந்த காலங்களில் நாங்கள் கவனித்த சில விடயங்களால் இந்தப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தோம் என வைத்தியர் தெரிவித்தார். இதன்போது, கார்போவைதறேட்டு, புரதம் உள்ளிட்ட குழந்தைகளுக்குத் தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்களின் குறைபாடு அவதானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சீஸ், பட்டர் போன்றவற்றை விட திரவ பால், முட்டை, சோறு மற்றும் பச்சை கீரைகளை உணவில் சேர்க்குமாறும், மஞ்சள் காய்கறிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும் வைத்தியர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணித் தாய்மார்களும் தங்களின் ஊட்டச்சத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்திருந்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2022இல் வெளியிடப்பெற்றது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -26**



ரணில்

நேற்றைய பத்தியில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட நீதி, நேர்மையற்ற அட்டூழியங்களை பட்டியலிட்டால் அது பெரும் புத்தகமாகவே உருவாகும் என்று குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கொடுமைகள், கொடூரங்கள் எவற்றுக்குமே இன்று வரை நீதி கிடைக்கவில்லை – ஒன்றிரண்டைத் தவிர. அவை – கிருஷாந்தி படுகொலை வழக்கு மற்றும் மிருசுவில் படுகொலை வழக்கு போன்றவை.

மிருசுவில் வழக்கில் இராணுவ அதிகாரியான சுனில் ரத்னாயக்கவுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தூக்குத் தண்டனை பிறகு மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தினால் ஆணித்தரமாக – ஐந்து நீதியரசர்களால் – உறுதிப்படுத்தப்பட்டது. வழக்கின் பின்னணிகளோ அவற்றின் கொடூரங்கள் பற்றியோ இதில் விவரிக்கப்படவில்லை.



சுனில் ரத்னாயக்க

ஆனால் பௌத்த தர்மத்தை அனுசரிப்பவர், அதனை வளர்க்க வேண்டுமென்று மகா சங்கத்தினருடன் அன்றாடம் அளவளாவுபவர், பௌத்தம்தான் நாட்டின் மதம் என்று நிறுவ வேண்டும் என்று இறுமாப்பு பூத்தவர், மிருசுவில் படுகொலைகளின் பின்னணிகள் எல்லாம் அறிந்திருந்தும், தனது தேர்தலில் வாக்குறுதியாக தான் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், பொது மன்னிப்பில் ரத்னாயக்கவை விடுதலை செய்வேன் என்று உறுதியளித்து, பதவிக்கு வந்ததும் பொது மன்னிப்புக்கு அமைவான நியதிகள் எவற்றையும் கணக்கில் எடுக்காது, அவரை விடுதலை செய்தார். இவற்றின் தாற்பரியம்எதுவென்றால், முள்ளிவாய்க்கால் வரையும், அதன் பின்னரும் நடக்கும் அட்டூழியங்கள் கூட அயல்நாடான இந்தியாவுக்கும் அதனையொட்டிய சர்வதேசத்திற்கும் தெரிந்திருந்தவைதான். ரத்னாயக்கா புரிந்த கொலையும், அதன் அரசியலும், அவரின் விடுதலையும் அவற்றுக்கும் புரிந்திருந்ததுதான்.

ஆனாலும் ஐக்கிய நாடுகள் சபையால் கூட முள்ளிவாய்க்கால் பேரவலத் தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதன் பின்னரான இந்த 13 ஆண்டுகளில் எந்த நியாயமான தீர்வையும் ஏற்படுத்த முடியவில்லை. இந்த சர்வதேசங்கள் தங்கள் சுயலாபங்களைக் கணக்கு வைத்துத்தான் இயங்கின. அவை அவற்றைத்தான் முன்வைக்கும் என்பதையும் அணுகுமுறைகளில் தமிழ்மக்கள் கணக்கெடுக்க வேண்டும். அதுபோலவே தங்களை நிலை நிறுத்திக் கொள்ள ராஜபக்ஷக்கள் தாங்களும் தங்களை சார்ந்தவர்களும் ஈடுபட்ட ஊழல்களையும் அவற்றிலிருந்து விடுபட்டுக் கொள்ள நீதிமன்றங்களை



மஹிந்த

யும் பாவித்து நியாயப்படுத்தியவை அனைத்தும் இந்தியாவும் சர் வதேசமும் அறியாதவையல்ல.

அப்படி இருந்தும் சீனாவின் நலன் சார்ந்த கொள்கைகளை ராஜபக்ஷக்கள் கடைப்பிடித்து, இவர்களின் மூக்கில் விரல் நுழைத்து சீண்டியமையால் சர்வதேசம் இந்த ஊழல்களையும், நீதி, நியாயமற்ற முறைகேடுகளையும் கணக்கு எடுக்காது, ராஜபக்ஷக்கள் மீண்டும் வளர விட்டு, நாட்டின் வங்குரோத்து நிலைக்கு ஆதரவு தந்தவர்களானார்கள். இவற்றில் சிலவற்றை உதாரணத்துக்குப் பார்க்கலாம். அதில் தமிழ் மக்களை இனம் என்ற ரீதியில் பாதித்தவை சில. மற்றவை பொதுவாக சிங்கள மக்களையும் நாட்டையும் பாதித்தவை.

சமூக செயற்பாட்டாளர்களாக இயங்கிய லலித், குகன் கடத்தப்பட்ட வழக்கில் சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டவர் கோட்டாபய. ஆயினும் பின்னர் இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ரவிராஜ், சந்திரநேரு, ஜோசப் பரராஜ சிங்கம், பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத், ஊடகவியலாளர் நடேசன் போன்ற பல கொலைகளில் நேரடித் தொடர்பில் இருந்த பிள்ளையான் நல்லாட்சி காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தாலும் பின் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டு மந்திரி பதவியும் வழங்கப்பட்டது.



கோட்டா

கொழும்பில் 11 தமிழ் இளைஞர்களைக் கடத்திக் காணாமலாக்கிய வழக்கில் தொடர்பில் இருந்த முன்னாள் கடற் படைத் தளபதி வசந்த கரன்னாகொட வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டமை மல்லாமல் பதவி பதவி உயர்வும் பெற்றார்.

இதைப்போலவே காணாமல் ஆக்கப்படுதலுக்கு உந்துதலாக இருந்தவர்களும் பல கொலைகளை நடத்தியவர்களும், இவற்றைத் தங்கள் நாட்டுக்காகச் செய்த தியாகிகள் என்று குறிப்பிட்டு வலம் வருகிறார்கள்.அரசு மதிப்பு பெறுகிறார்கள்.

இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஊழல்கள் ஊக்குவிக்கப்பட்டமையும், நிர்வாகத்திறன் நிலைகுலைந்தமையும்தான் முக்கிய காரணங்கள். அவற்றில் இலங்கை அரசு நிறுவனங்களும் வங்கிகளும் பாரிய பங்கு வகித்தன.

கடந்த வருடம் மட்டும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 83 பில்லியன் ரூபாவை நட்டமாகச் சந்தித்தது. பெப்ரவரி 2022 வரை நாள் ஒன்றுக்கு 550 மில்லியன் ரூபாவை அது இழக்கிறது. மின்சாரத்துறை 929 பில்லியன் ரூபா, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை 37 பில்லியன் ரூபா, விமான சேவைகள் நிறுவனம் 3,748 மில்லியன் ரூபா, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் 372 பில்லியன் ரூபா (இது இந்த வருடம் 900 பில்லியனை எட்டலாம் என்று கணக்கு), அரச பொருளியல் கூட்டுத்தாபனம் 730 மில்லியன் ரூபா, அரச அபிவிருத்தி நிறுவனம் 106 மில்லியன் ரூபா, பெருந் தோட்ட க் கூட்டுத்தாபனம் 95 மில்லியன் ரூபா, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை 757 மில்லியன் ரூபா, சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு 244 மில்லியன் ரூபா, ரூபவாஹினி தொலைக் காட்சிக்கு 56 மில்லியன் ரூபா, கைப்பணிப் பொருள்கள் சபைக்கு 58 மில்லியன் ரூபா, அச்சகக் கூட்டுத்தாபனம் 225 மில்லியன் ரூபா, மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் மீன்பிடித்துறைமுக நிறு வனமும் 1300 மில்லியன் ரூபா, ஹோட்டல் அபிவிருத்தி நிறுவனம் 155 மில்லியன் ரூபா என அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்த நட்டங்கள் 2020 - 2021 பின் னர் மார்ச் 2022 வரை எனப் பல தரப்பட்ட காலங்களுக்கு என வெளியிடப்பட்டவை. அதுமாத்திரமல்ல, இவை எல்லாம் ஒருங்கு சேர்ந்து நாட்டை வங்கு ரோத்து நிலைக்குக் கொண்டு செல்கின்றன என திறைசேரிக்குக்கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அவை தவிர, பல நிறுவனங்கள் நிதி அமைச்சரின் கீழ் கலைக்கப்படுவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்காகப் பாரப்படுத்தப்பட்டுள்ளன. அவை, தொலைத்தொடர்புத் திணைக்களம், வனவிலங்கு நிதியம், உள்ளூர் வர்த்தகத் திணைக்களம், மிஹின் லங்கா, லங்கா துணிகள் நிதியம், சி.டபிள்யூ. ஜி., அம்பாந்தோட்டை நிதியம், ரஜரட்ட உணவுக் களஞ்சியம், ஜனதா உரக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா ரப்பர் தொழில் நிலையம் என்பன. இந்த நிறுவனங்களில் எல்லாம் நிதி முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், அவற்றை நிர்வகித்தவர்களிடம் இருந்து பொறுப்புக்கூறல் விதிகளின் கீழ அறவிடுவதா, அல்லது ஆற்றில் போட்டு மூடி விடுவதா என்ற தீர்மானத்துக்கு அவை காத்துக்கிடக்கின்றன. தற்பொழுது இவை நிதியமைச்சர் என்ற முறையில் ரணிலின் கீழ் வருகின்றன.

இவை தவிர, இப்படியான நிர்வாகச் சீர்கேடுகள் மத்திய, மாகாண, மாவட்ட அரசியல் என்று, நாட்டின் நிர்வாகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரந்திருந்தது. இவற்றை ஒரு கணம் மனதில் கூட்டிப் பார்த்தால் விடயம் விளங்கும்.

இதில் ஒரு நன்மை என்னவென்றால் இந்தக் கூட்டுத்தாபனங்களில் தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் கொண்ட முகவர்களாகத் தமிழ் மக்கள் இருக்கவில்லை. இது அவர்களால் அவர்களுக்குச் செய்யப்பட்டது. அப்படித் தமிழர்களாக இருந்திருந்தால், மத்திய வங்கிப் பிணை முறி ஊழல் எல்லாமே மகேந்திரனில் சரிந்த மாதிரி தமிழர்களே நாட்டைச் சூறையாடி விட்டனர் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கும்.

(ஊழல் விவரங்கள் தொடரும்)



பிள்ளையான்